**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

அசல் வழக்கு எண்: 57/2021
நாள்: 24.04.2024
PW.1
பெயர்: மாரியப்பன்(எ) மாரிக்கண்ணு
த/பெ : சுப்பையா
வயது : 65
ஊர் : மாராயப்பட்டி
தொழில்: விவசாயம்

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

(1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்களாக இந்நீதிமன்றத்தால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.)

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை:–**

உங்களுடைய பெயர் மாரியப்பன் என்ற மாரிக்கண்ணு என்பதை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. வழக்குச்சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 144 ஆகும். சர்வே எண்.144 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. புலஎண்.144 ல் மொத்தம் எத்தனை உட்பிரிவு உள்ளது என்று உங்களுக்குத் தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்குத் தெரியாது. நீங்கள் எந்த உட்பிரிவிற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

புல எண்.144 ற்கு எந்த பக்கத்தில் குளம் உள்ளது என்றால் மேற்குபுறத்தில் உள்ளது. உங்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாசொத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது, அனுமார் கோவில் ஒன்று அந்த இடத்தில் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்பு தான் அனுமார் கோவில் தாவா இடத்தில் கட்டப்பட்டது. தாவா இடத்தில் ஏற்கனவே அனுமார் கோவில் கட்டப்பட்டு இருந்தது என்றும், நீங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போது, அனுமார் கோவில் உள்ளதை இவ்வழக்கில் காட்டாமல் மறைத்தும், பின்னிட்டு வழக்கிற்கு பிறகு தான் அனுமார் கோவில் கட்டப்பட்டுள்ளது என்று பொய்யாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மேற்படி அனுமார் கோவினை மாராயப்பட்டி கிராம ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து கட்டினார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல்

செய்த பிறகு அனுமார் கோவில் கட்டப்பட்ட விவரத்தை நீங்கள் நீதிமன்றத்திற்கு முறைப்படி இவ்வழக்கில் தெரியப்படுத்தினீர்களா என்றால் இல்லை. கோவில் திருப்பணியாளர்கள் யாரையும், இந்த வழக்கில் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

தாவா இடத்திலிருந்து உங்களுடைய தார்சு வீடு 300 அடி தூரத்தில் இருக்குமா என்றால் இருக்கும். நீங்கள் தாக்கல் செய்துள்ள தாவா இடத்திற்கான பட்டா சுப்பையா மகன் மாரியப்பன் என்பவர் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாரியப்பன் பெயரில் வழங்கப்பட்ட பட்டா கடந்த 2021 ஆம் வருடத்தில் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1992 ஆம் வருடம் அந்த பட்டாக்கள் வழங்கப்பட்டது.

பட்டா வழங்கும்போது வரைபடத்தில் உட்பிரிவுடன் காண்பித்து வரைபடத்தில் உங்களுடைய இடம் எந்த இடம் என்று குறிப்பிட்டு பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு கொடுக்கப்பட்ட இடத்திற்கான பட்டாவை என்னுடைய பெயரில் கணக்கில் ஏற்றுவதற்கு ஊர்காரர்கள் ஆட்சேபனை தெரிவித்ததால், அப்போதிலிருந்தே அதிகாரிகள் என் பெயரில் ஏற்றவில்லை. மேற்கூறியதுபோல், வரைபடத்தில் உட்பிரிவு செய்து ஏற்றாததால், உங்களுக்கு தாவாஇடமான புல எண்.144 ல் எந்த இடம் உங்களுக்கு கொடுக்கப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான்.

உங்களுடைய கட்சியானது இந்த வழக்கில் உங்களுக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் இடம் பட்டா படி எங்கு வருகிறது என்று அளந்து கொடுக்கவேண்டும் என்று தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுகிறீர்களா என்றால் சரிதான்.

**(4, 5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைத் தொடர்ச்சிக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

| | |
|---|---|
| sd//- மாரியப்பன் என்ற மாரிக்கண்ணு<br>PW1. | //sd//- திரு.S.அன்புதாசன்,B.com., B.L.,<br>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இலுப்பூர் (மு.கூ.பொ). |